# விலைமனுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை புகையிரத திணைக்களம்

## 18 இலக்கம் கொண்ட S12 AFC பெட்டிகளின் இடைக்கால பழுதுபார்ப்புக்கான பெறுகை - பெறுகை இலக்கம் - SRS/F. 8181

1. இலங்கை புகையிரத திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் (முக்கிய) தலைவர், கொழும்பு, 18 இலக்கம் கொண்ட S12 AFC பெட்டிகளின் இடைக்கால பழுதுபார்ப்புக்கான பெறுகைக்காக உள்ளூர் உற்பத்தியாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்வார்.
2. விலைமனுக் கோரல் தேசிய போட்டி விலைமனு (NCB) நடைமுறையின் மூலம் நடத்தப்படும்.
3. ஆர்வமுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் 11/05/2026 முதல் 01/06/2026 வரை வேலை நாட்களில் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை விலைமனு ஆவணங்களைப் பார்வையிடலாம்.

   **பிரதி பொது முகாமையாளர் (பெறுகை),**
   **புகையிரத பெறுகை உப திணைக்களம்,**
   **ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**
   **தொலைபேசி இலக்கங்கள்: 94 (11) 2438078**
   **அல்லது 94(11) 2400202**
   **பெக்ஸ் இலக்கம்: 94(11) 2432044**
   **மின்னஞ்சல்: srs.slr@gmail.com, tender1.srs@gmail.com**
   **இணையதளம்: www.railway.gov.lk**

4. விலைமனுதாரர், புகையிரத/கப்பல்/கைத்தொழில் மின் உற்பத்தி பயன்பாடுகளில் உள்ள கைத்தொழில் டீசல் இயந்திரங்களின் பிரதான திருத்தங்களைச் (overhauls) செய்வதில் திறமையையும் அனுபவத்தையும் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் இயந்திர திருத்தம்/பழுதுபார்ப்பு பணிகள் தொடர்பான ISO 9001:2015 தர மேலாண்மை அமைப்பு சான்றிதழ் அல்லது இலங்கை புகையிரத திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புகழ்பெற்ற நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அதற்கு சமமான சான்றிதழை கொண்டிருக்க வேண்டும்.
5. ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களை, பிரதி பொது முகாமையாளர் (பெறுகை), புகையிரத பெறுகை உப திணைக்களம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை என்ற முகவரிக்கு எழுத்துப்பூர்வமான விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம், 11/05/2026 முதல் 01/06/2026 பிற்பகல் 3.00 மணி வரை ரூ. 24,500/- கொண்ட திரும்பப் பெற முடியாத பெறுகை கட்டணத்தைச் செலுத்தி ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.
6. அனைத்து விலைமனுக்களும் ஒரு விலைமனு பிணையுடன் (Bid security) சமர்ப்பிக்கப்பட வேண்டும். விலைமனு பிணைத் தொகை ரூ. 1,300,000/- ஆக இருக்க வேண்டும் என்பதுடன், இது இலங்கையில் இயங்கும் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாக இருக்க வேண்டும்.
7. விலைமனுவிற்கு முன்னைய கூட்டம் (Pre bid meeting) 21/05/2026 அன்று முற்பகல் 10.00 மணிக்கு பிரதம பொறியியலாளர் (இயக்க சக்தி) உப திணைக்களம், தெமட்டகொடவில் நடைபெறும்.
8. விலைமனுக்கள் கீழே உள்ள முகவரிக்கு 02/06/2026 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக வழங்கப்பட வேண்டும். விலைமனுக்கள் முடிவடைந்தவுடன் உடன்டியாக அவை திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுத் திறப்பின் போது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (முக்கிய),**
**பிரதி பொது முகாமையாளர் (பெறுகை) அலுவலகம்,**
**இலங்கை புகையிரத திணைக்களம்,**
**இல. 1347, ஒல்கொட் மாவத்தை,**
**கொழும்பு 10**

**குறிப்பு இல. SRS/F. 8181**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (முக்கிய)**
**இலங்கை புகையிரத திணைக்களம்**